*1991 சனவரி 24]*

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் கையகப்படுத்தும் வேலை எப்போது முடிவடையும்? மதுரை நகரில் வாகனங்களின் எண்ணிக்கை குறிப்பாகச் சரக்கு லாரிகள், 'டூ வீலர்ஸ்' எனப்படும் இரண்டு சக்கர வண்டிகள் ஆகியவை மிக அதிகமாகப் பெருகி விட்ட காரணத்தால் திருமங்கலம், செக்காவூரணி, மேலூர் போன்ற பகுதிகளில் இருந்து வரக்கூடிய மக்கள் போக்குவரத்து இடைஞ்சல் காரணமாக அத்தியாவசியமான இடங்களுக்கு அதாவது நீதிமன்றம், அரசு மருத்துவ மனை, பஸ் ஸ்டாண்ட், புகைவண்டி நிலையம் ஆகியவற்றுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் செல்ல முடியாத நிலையில் தவிக்கிற காரணத்தால், விரைவில் நிலத்தைக் கையகப்படுத்தி மதுரையைச் சுற்றி வட்டச்சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, 1982, 1983-ஆம் ஆண்டிலேயே இதற்கு டெக்னிக்கல் சாங்ஷன் கிடைத்தும் கூட என்ன காரணத்தாலோ தெரியவில்லை, இத்தனை ஆண்டு காலம் அப்படியே நின்றுபோய் இருக்கிறது. நான் கேள்வி நேரத்தில் அவைகளை எல்லாம் தெரிவிக்க விரும்பவில்லை. இருந்தாலும் கலைஞர் அவர்களின் அரசு ஏற்பட்ட பிறகு, நில எடுப்பு சம்பந்தமாக ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்-இடத்திலே பேசி அவர்கள் இதிலே துரிதமாக ஈடுபட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்தப் பணியைப் பொறுத்தவரையில் சுமார் 24 கிராமங்களில் 53,045 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த வேண்டி இருக்கிறது. அப்படி நிலம் கையகப்படுத்துவதில் சட்டச் சிக்கல்கள் பல உண்டு. வழக்கு மன்றங்களுக்குப் போக வேண்டும். இரண்டாவதாகப் பல்வேறு கிராமங்கள் வழியாகவும், அதாவது மதுரை வடக்கு, மதுரை தெற்கு, திருமங்கலம் ஆகியவற்றைச் சுற்றி 24 கிராமங் மங்கள் வழியாகவும் இந்தச் சாலையை அமைக்க வேண்டி இருப்பதால், இதிலே தாமதம் இப்போது ஏற்பட்டாலும் அந்தத் தாமத்தைத் தவிர்த்து வேகமாக பணியாற்றும்படி கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இப்போது இந்த அரசு ஏற்பட்ட பிறகு நிலம் கையகப்படுத்தும் பணி வருவாய்த்துறையால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. டிராஃப்ட் டிக்ளரேஷன் ஸ்டேஜிலே 3 ஐட்டம்ஸ், வேலுயேஷன் ஸ்டேஜிலே 8 ஐட்டம்ஸ், அவார்ட் ஸ்டேஜிலே 4 ஐட்டம்ஸ், போஸ்ட் அவார்ட் ஸ்டேஜிலே 13 ஐட்டம்ஸ் இருக்கின்றன. ஆக எப்படியும் விரைவில் 6, 7 மாத காலத்திற்குள்ளாக, இந்தப் பணிகளை முடித்துவிட வேண்டும். இந்த ஆண்டில் அந்த வட்டச்சாலை அமைக்கின்ற பணியைத் துவக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே எப்படி இருந்தாலும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அந்தச் சாலை அமைக்கிற பணி துவங்கப்பட்டுவிடும்.

[1991 சனவரி 24

9-45 மணி

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே எப்படியாவது மதுரையைச் சுற்றி வட்டச் சாலை அமைத்து விடுவோம் என்று கூறி இருப்பதற்கு நன்றி கூறிக் கொள்கிறேன். குறிப்பாக 2, 3 ஆண்டுகளுக்கு முன்பே மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் போக்கு வரத்து இடையூறைத் தவிர்ப்பதற்காக திருமங்கலம், திருப்பரங் குன்றம் மத்தியிலே அமைந்திருக்கின்ற தோப்பூர் கிராமத்தில் இன்றைய தினம் மதுரை மத்திய காய் கறிச் சந்தையை மாற்றி அமைத்திடவும், இந்த சரக்கு லாரிகள் அங்கே தங்கவும் அரசு திட்டம் தீட்டியுள்ளதாக அறிவித்துள்ளார். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிடவும், குறிப்பாக திருமங்கலம் தென் பகுதியில் வரக்கூடிய, விமான நிலையம் சென்று பயணம் செய்யக் கூடிய அனைவரும் மதுரை நகரத்திற்கு வந்து அதிக தூரம் செல்வதால், அதைத் தடுத்திடவும் இதை மனதிலே கொண்டு மதுரை மாவட்ட மக்களுடைய பிரச்சினைகளைப் போக்குவதற்கு நம் முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே செய்து கொடுப்பாரா என்பதை உறுதி மொழி யாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தும் பணியை வேகமாக்கி இந்த ஆண்டு எப்படியும் சாலையை அமைப்பதற்கு ஆரம்பித்துவிடுவோம் என்றுதான் சொன்னேன். அவர் முடித்து விடுவோம் என்று சொல்லி நன்றியைச் சொல்லிவிட்டார். ஆகவே ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற் கொள்ளும் என்று ஜாக்கிரதையாகவே நான் சொல்லி இருக் கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்று பொது உபயோகத்திற்காக நிலம் கையகப்படுத்துவது என்பது பல காரணங்களால் தாமதப்படுத்தப்படுகிறது. மதுரையினுடைய இந்தப் பாதை மட்டுமல்ல. சென்னையில் உள்ள வட்ட சாலையானா லும் சரி, சென்னையில், பீச்—லஸ் இடையிலேயான துரித ரயில் ஆனாலும் சரி, சென்னையிலே அமைக்கப்பட இருக்கிற பாதாள ரயில் திட்டமாக இருந்தாலும் சரி, இரண்டாவது ரயில் முனை யம் ஆக இருந்தாலும் சரி, நிலங்களை கையகப்படுத்துவதிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. சட்டங்களிலே இருக்கக் கூடிய சந்து பொந்துகளிலே, இண்டு இடுக்குகளிலே நில உடைமையாளர்கள் எப்படியோ ஒளிந்து கொண்டு வழக்குகள் போட்டு அவை நீதிமன்றத்திலே தேங்கிக் கிடக்கின்றன. பல ஆண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS